**UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE**
**MINISTRY OF EDUCATION**

CURRICULUM PLANNING AND DEVELOPMENT DIVISION
2 BEATTY ROAD
SINGAPORE 209954

TELEPHONE : 62980781
FACSIMILE : 62984677

Ref: UPTLC/2016/P002

25 ஜனவரி 2016

அன்புள்ள பெற்றோருக்கு,

**அறிமுக தினம்**

வணக்கம்.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் இவ்வாண்டு உயர்நிலை 1-இலும் பிற நிலைகளிலும் புதிதாகச் சேர்ந்து தமிழ் பயிலும் மாணவர்களுக்கு அறிமுக தினம் ஒன்று நடைபெறவுள்ளது.

**விவரம்:**

| நிகழ்வு | தேதி | பங்குபெறுவோர் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| அறிமுக தினம் 2016 | 13/02/2016 (சனிக்கிழமை) | பெற்றோர்கள் / மாணவர்கள் | 9.00am-10.30am | பயிற்சி அறை (Level 3) |

2 இந்த அறிமுக தினத்தில் நீங்களும் உங்கள் பிள்ளையும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அன்றைய தினத்தில் இங்கு மாணவர்களுக்கு உள்ள வசதிகள், தேர்வு முறைகள், அவர்களுக்கு நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆகியவை பற்றி விளக்கப்படும். அதனால் நீங்களும் உங்கள் பிள்ளையும் இந்த அறிமுக தினத்தில் கலந்துகொண்டு, இந்த முக்கியத் தகவல்களை அறிந்துகொள்ள வேண்டும்.

3 இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள இசைவு முறியை (Reply Slip) நிறைவு செய்து, எதிர் வரும் **பிப்ரவரி 5-ஆம் தேதிக்குள்** உங்கள் பிள்ளையின் தமிழாசிரியரிடம் கொடுக்கச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இது குறித்து நீங்கள் மேலும் விவரம் அறிய விரும்பினால் 62980781 (ext. 515) என்னும் எண்மூலம் ஆசிரியர் திரு பொன் மாணிக்கம் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

நன்றி!

அன்புடன்

திரு இரா அன்பரசு
நிலைய இயக்குநர்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

Ref: UPTLC/2016/P002

25 Jan 2016

Dear Parent/Guardian

**Orientation Day 2016**

This is to inform you that the Umar Pulavar Tamil Language Centre (UPTLC) will be conducting an Orientation Day for all Secondary 1 and new students who have joined this year.

Details of the Programme are as follows:

| Programme | Date | Participants | Time | Venue |
|---|---|---|---|---|
| Orientation Day 2016 | 13/02/2016 (Saturday) | Parent/Guardian & Students | 9.00am-10.30am | Training Room (Level 3) |

The Orientation Day aims to familiarize and update the parents and students on the Centre`s Teaching & Learning processes, Assessment, Centre's facilities and other activities.

We would appreciate it if you could return the attached acknowledgement slip to us by Friday, **05 Feb 2016** to facilitate the necessary logistic arrangements for the Programme.

We look forward to your attendance together with your child at the Orientation Day.

Thank you.

In partnership,

R. Anbarasu
Centre Director
Umar Pulavar Tamil Language Centre

........................................................... xxxx ...........................................................

**இசைவு முறி (REPLY SLIP)**

அன்புள்ள தமிழாசிரியருக்கு,

**அறிமுக தினம் 2016**

எதிர்வரும் 13.02.2016-ஆம் தேதி சனிக்கிழமை அன்று, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெறும் 'அறிமுக தினம்' என்ற நிகழ்வில் * நான் / என் மகன் / மகள் பங்குகொள்ள ***இயலும் / இயலாது** என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர் பெயர்: ______________________________ வகுப்பு: ________________________

பெற்றோர் பெயர்: ___________________________ கையொப்பம்: ________________________

* தயவு செய்து பொருத்தமற்றதை நீக்கவும்
Please delete accordingly